FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8069076

1. District : DVAC Chennai — PS: Chennai City-II — Year: 2025 — FIR No.: 02 — Date: 16.10.2025
   மாவட்டம் — காவல்நிலையம் — ஆண்டு — முத.அ. எண் — நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Act 1988 [As amended in 2018] — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்: 106 [Sec. 102 Cr.P.C]
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : — Date from : 15.10.2025 — Date to : 15.10.2025
   குற்ற நிகழ்வு நாள் — நாள் முதல் — நாள் வரை

   Time Period : — Time from : 15.30 Hrs — Time to : 22.00 Hrs.
   நேர அளவு — நேரம் முதல் — நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 16.10.2025 — Time : 16.00 Hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) — Time : 16.10.2025 @ 1830 Hrs. on Registration of FIR
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — நேரம்

4. Type of Information : Written/ Oral : Written typed
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Around 20 KMs. North-West
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : — (b) Address : Greater Chennai Corporation Zone-7, Revenue Department MTH High Road, Ambattur, Chennai-53
   முறைக் காவல் எண் — முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. V. Thiruvengadam — (b) Father's/ Husband's Name :
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : — (d) Nationality : Indian — (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : — Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : Deputy Inspector Cell Officer — (g) Address : Chennai District Inspection Cell office, Chennai Collectorate Campus, Chennai – 600 001.
   தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) Tr. S. KIRUBAKARAN, Senior Revenue officer, Revenue Department, Zone-7, Ambattur, Greater Chennai Corporation, Chennai
   (2) Tr. M. SHAJI, Licence Inspector, Revenue Dept, Zone-7, Greater Chennai Corporation
   (3) Tr. D. Selvakumar, NULM Staff, Revenue Dept, Zone-7, Greater Chennai Corporation, Ch-53

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : Cash of Rs. 27,620/= AND Two Nos. Gold coins weighing 2 grams and 8 grams
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Separate Sheet Enclosed —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
Informed to the Complainant

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.10.2025 at 1900 hrs.

Name: பெயர் CS. VALLINAYAGAM
Rank: நிலை INSPECTOR OF POLICE
VAC, CC-III unit
Chennai-600016.

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur Chennai-600 016

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-3 குற்ற எண்.02/2025 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 மற்றும் BNSS பிரிவு-106 (பிரிவு 102 Cr.P.C.) வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு</u>

சென்னை-திருத்தணி நெடுஞ்சாலை, அம்பத்தூர், காமராஜபுரம், எண்.536 என்ற முகவரியில் இயங்கி வரும் சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவு அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை தொடர்பாக சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.வே.திருவேங்கடம், சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகம், சிங்காரவேலர் மாளிகை, சென்னை-1 அவர்கள் 15.10.2025ந்தேதியிட்ட அளித்த புகார் மனு தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, புகார் மனுவின் சாரம்சம் குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரியிடம் தெரிவித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஒப்புதல் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து, திருமதி.வி.தமிழ்மணி, துணை காவல் கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,சென்னை-16 அவர்கள் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் கொடுத்த புகார் மனு தொடர்பாக வழக்குப்பதிவு செய்ய அறிவுறுத்தியதின் பேரில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-3 குற்ற எண்.02/2025 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 மற்றும் BNSS பிரிவு-106 (பிரிவு 102 Cr.P.C.) ஆகிய பிரிவுகளின் கீழ் இன்று 16.10.2025ந்தேதி மாலை 17.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.வே.திருவேங்கடம், துணை ஆய்வுக்குழு அலுவலர், சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகம், சிங்காரவேலர் மாளிகை, சென்னை-1 பெறுநர் துணை காவல்

கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. கடித எண்.Inspection/321/2025 நாள் 15.10.2025 அய்யா, பொருள் இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை நாள் 15.10.2025 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவரது குழுவினர் இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 15.10.2025ந்தேதி சென்னை-53, அம்பத்தூர், சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-7 அலுவலகத்தின் முதல் தளத்தில் இயங்கி வரும் வருவாய் பிரிவின் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு சோதனையின் போது சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவு அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் ரூ.27,620/- கைப்பற்றப்பட்டது. மற்றும் தரைத்தளத்தில் வருவாய் பிரிவின் தொழில் வரி, நிறுமம் வரி மற்றும் இதர வரி வசூல் செய்வதற்காக உள்ள தனி கேபின் அறையில் பணியல் இருந்த திரு.டி.செல்வகுமார் அவர்களின் அலுவலக வலது பக்க டேபிள் டிராயரில் இருந்து இரண்டு 916 KDM தங்க நாணயங்கள் (ஒரு தங்க நாணயம்-2 கிராம் மற்றும் மற்றொரு தங்க நாணயம்-8 கிராம்) ஆகியவற்றுடன் இந்த திடீர் கூட்டு சோதனையின் போது தயார் செய்யப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் பணம் ரூ.27,620/- மேற்சொன்ன இரண்டு தங்க நாணயங்கள் இத்துடன் பெறப்பட்ட மேற்சொன்ன அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் வாக்குமூலங்கள் உரிய மேல்

நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி இருதுறை கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள ஒப்பம் 15.10.2025 (திரு.வே.திருவேங்கடம்) துணை ஆய்வுக்குழு அலுவலர், சென்னை மாவட்டம். இணைப்பு- மேற்கண்டவாறு Forwarded to the Inspector of Police, CC-III, V&AC for registration of case Sd/-xx V.Thamizhmani 15.10.25 Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Chennai City-III, Alandur, Chennai-600 016. Sir, Received this complaint on 16.10.2025 and after getting concurrence from the higher officials, this day (16.10.2025) at 17.00 hrs, I am registering a case in V&AC Chennai City-III Crime No.02/AC/2025/CC-III U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 and Section 106 of BNSS (Section 102 Cr.P.C.) and taken up for investigation Sd/-(S.VALLINAYAGAM), Inspector of Police, Chennai City-III Unit, Vigilance & Anti-Corruption, 16.10.2025.

திடீர் கூட்டு தணிக்கை செயல்முறை நடவடிக்கை

சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.ரவிச்சந்திரன் அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகம், சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் துணை ஆய்வுக்குழு அலுவலராக பணியாற்றும் திரு. வே.திருவேங்கடம் என்பவரும் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் தலைமையிலான குழுவினர் இணைந்து இன்று 15.10.2025-ந்தேதி மதியம் 3.30 மணியளவில் சென்னை-53, சென்னை-திருத்தணி நெடுஞ்சாலை, அம்பத்தூர், காமராஜபுரம், எண்.536 என்ற முகவரியில் இயங்கி வரும் சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய்

பிரிவில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை அறிக்கையின் விவரம் பின்வருமாறு

இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்		திரு.வே.திருவேங்கடம், துணை ஆய்வுக்குழு அலுவலர், சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகம், சென்னை-600 001.
		திருமதி.தமிழ்மணி, துணை காவல் கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16.
		திரு.வள்ளிநாயகம், காவல் ஆய்வாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16.

சென்னை திருத்தணி நெடுஞ்சாலை, அம்பத்தூர், காமராஜபுரம், எண்.536 என்ற முகவரியில் இயங்கி வரும் சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவில் பணியாற்றும் அலுவலர்கள், சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-7 வார்டு-79 முதல் வார்டு-93ற்கு உட்பட்ட அனைத்து வகையான சொத்து வரி, தொழில் வரி, வணிக வளாகம் தொடர்பான வரி விதிப்பு, கடை உரிமம் (Trade License) ஆகிய தொடர்பான பணிகளுக்கு வரி விதிப்பதற்கும் மற்றும் இதர பணிகளுக்கும் பொதுமக்களிடம் மற்றும் கம்பெனிகளின் உரிமையாளர் மற்றும் இதர நபர்களிடம் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அவரது

பரிந்துரையின் பேரில் சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகம், சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் துணை ஆய்வுக்குழு அலுவலராக பணியாற்றும் திரு.வே.திருவேங்கடம் என்பவருடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் தலைமையிலான குழுவினருடன் இணைந்து மேற்சொன்ன அம்பத்தூர் சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவில் இன்று 15.10.2025-ந்தேதி மதியம் 3.30 மணியளவில் இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2) சென்னை-53 அம்பத்தூர், காமராஜபுரம், எண்.536 என்ற முகவரியில் உள்ள சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவு அலுவலகம், வடக்கு தெற்காக செல்லும் சென்னை-திருத்தணி நெடுஞ்சாலையில் கிழக்கு பக்கத்தில் தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கி வருகிறது. மேற்படி கட்டிடத்தின் தரைத்தளத்தில் பொறியியல் துறை, தேர்தல் பிரிவு அலுவலகம், இ-சேவை பிரிவு மையம், உதவி ஆணையர் அலுவலகம், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், மண்டல குழுத்தலைவர் அலுவலகம், நிர்வாகப்பரிவு அலுவலகம், கட்டிட அனுமதி வழங்கும் அலுவலகம் ஆகியவை இயங்கி வருகிறது. மேற்சொன்ன அலுவலகத்தில் முதல் தளத்தை அடைந்தவுடன் முதலில் கலந்தாய்வு அரங்கு அறையும், அதனை தொடர்ந்து இடது புறத்தில் தெற்கு பக்கத்தில் கணக்கு குழும அலுவலர் அலுவலகம், மின்துறை அலுவலகம் அதனை தொடர்ந்து வருவாய் பிரிவு என்ற பெயர் பலகையுடன் கொண்ட அலுவலகம் உள்ளது. அந்த வருவாய் பிரிவு அலுவலகத்தின் பிரதான நுழைவு வாயிலின் உள்ளே நுழைந்ததும், சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.வே.திருவேங்கடம் தன்னையும் ஊழல்

தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3 துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவரது குழுவினரையும் மேற்சொன்ன வருவாய் பிரிவின் அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களிடம் அறிமுகம் செய்து கொண்டார்கள்.

3) சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவு அலுவலகத்தின் உள்ளே வலது பக்கத்தில் இருக்கையில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் யோகன் என்றும், அலுவலக உதவியாளராக இந்த அலுவலகத்தில் கடந்த 09.12.2024ந்தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரது இருக்கைக்கு முன்பு இருந்த டேபிளின் டிராயர் மற்றும் அலுவலக கோப்புகள் வைக்கப்பட்டுள்ள இரும்பு பீரோவும் சோதனை செய்யப்பட்டது. மேலும் அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது தனது பேண்ட் வலதுபுற பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.270/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டதற்கு, அவர் தனது சொந்தப் பணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அவரிடமே அந்த பணம் ரூ.270/- திருப்பி அளிக்கப்பட்டது. பின்னர் மேற்சொன்ன வருவாய் பிரிவு அலுவலகத்தில் அடுத்த இருக்கையில் கிழக்கு அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் லட்சுமி என்றும், தொழிலாளராக இந்த அலுவலகத்தில் கடந்த 02.02.2015ந்தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். இந்த அலுவலகத்தில் பொதுமக்கள் கொடுக்கும் மனுக்கள் மற்றும் இதர மனுக்களை பெற்றும் அதனை சம்பந்தப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்வதற்கும் பதிவுரு எழுத்தர் திருமதி.வரலட்சுமி என்பவருக்கு உதவியாக பணிசெய்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது தனது கைப்பையில் இருந்து பணம் ரூ.100/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டதற்கு, அவர் தனது சொந்தப் பணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அவரிடமே அந்த பணம் ரூ.100/- திருப்பி அளிக்கப்பட்டது. அவரது இருக்கைக்கு முன்பு இருந்த டேபிளின்

டிராயர் மற்றும் அவரது இருக்கைக்கு பின்புறத்தில் அலுவலக கோப்புகள் காணப்படும் பச்சைநிற இரும்பு பீரோவும் சோதனை செய்யப்பட்டது. இந்நிலையில் தகவல் கொடுக்கப்பட்டதின் அடிப்படையில் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவின் முதுநிலை வருவாய் அலுவலர் கிருபாகரன் வருவாய் பிரிவு அலுவலகத்தின் உள்ளே வந்து தன்னை அறிமுகம் செய்து கொண்டார். மேலும் அவர் இந்த அலுவலகத்தில் கடந்த அக்டோபர்-2024 முதல் முதுநிலை வருவாய் அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவரது பணி குறித்து கேட்ட போது அவர் கடந்த 19.09.1988ந்தேதி அடிப்படை சுகாதார பணியாளராக அரசு பணியில் சேர்ந்ததாக தெரிவித்தார். அம்பத்தூர் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-7 அலுவலகத்தின் எல்லையாக அம்பத்தூர் ஓரகடம் வரையும், மற்றொரு பகுதியாக ஸ்டேட் போர்டு மருத்துவமனை வரையும், மற்றொரு பகுதியாக கொரட்டூர் வரையும் மற்றும் மற்றொரு பகுதியாக முகப்பேர் வரையும் உள்ளதாக தெரிவித்தார். மேலும் தனது பணிகளாக தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம்-1998யில் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள், கடைகள் வணிக வளாகங்கள் ஆகியவற்றிற்கான தொழில் வரி, நிறுமம் வரி, தொழில் உரிமம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை காசோலையாக வசூல் செய்யும் பணியை மேற்பார்வை செய்வது, தேர்தல் பணிகள், வருவாய் பிரிவு தொடர்பாக கலந்தாய்வு கூட்டத்தில் பங்கேற்பது மற்றும் இதர பணிகளையும் செய்வதாக தெரிவித்தார்.

4) பின்னர் வருவாய் பிரிவு அலுவலகத்தில் திருமதி.லட்சுமி என்பவரின் இருக்கைக்கு அடுத்து கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் வரலட்சுமி என்றும், இந்த அலுவலகத்தில் பதிவுரு எழுத்தராக கடந்த செப்டம்பர்-2006 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். இந்த அலுவலகத்தில் தபால் பிரிவிற்கு வரும் அனைத்து வகையான அலுவலக கடிதங்கள் மற்றும்

பொதுமக்கள் கொடுக்கும் மனுக்கள் மற்றும் இதர வகை மனுக்களை பெற்றும் அதனை சம்பந்தப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்தும், மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அனுப்பும் பணியை செய்து வருவதாகவும் மற்றும் தனக்கு அலுவலக பணியில் திருமதி.லட்சுமி என்பவர் உதவியாக உள்ளதாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது கைப்பையின் உள்ளே இருந்து தனது சொந்த பணம் என ரூ.280/- எடுத்து ஆஜர் செய்ததை தொடர்ந்து அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.280/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அவரது இருக்கைக்கு முன்பு இருந்த டேபிளின் டிராயர் சோதனை செய்யப்பட்டது.

5) பின்னர் திருமதி.வரலட்சுமி என்பவரின் இருக்கைக்கு பின்புறத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் பரத்குமார் என்றும் இந்த அலுவலகத்தில் சாலை பணியாளராக கடந்த 03.04.2019ந்தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். இந்த அலுவலகத்தில் தபால் பிரிவிற்கு வரும் அனைத்து வகையான அலுவலக கடிதங்கள் மற்றும் கோப்பு கடிதங்கள் ஆகியவற்றை மின்னனு மூலம் பதிவு செய்து சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அனுப்பும் பணியை செய்து வருவதாகவும் மற்றும் அலுவலகத்தில் பொதுவான தட்டச்சு பணியையும் மேற்கொள்வதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து தனது சொந்த பணம் என ரூ.60/- எடுத்து ஆஜர் செய்ததை தொடர்ந்து அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.60/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அவரது இருக்கைக்கு முன்பு இருந்த டேபிளின் டிராயர் சோதனை செய்யப்பட்டது.

6) பின்னர் திரு.பரத்குமார் இருக்கைக்கு முன்புறத்தில் வலது பக்கத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் மஞ்சு என்றும் இந்த அலுவலகத்தில் சாலை பணியாளராக கடந்த 01.12.2014ந்தேதி முதல்

பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். இந்த அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் சம்பள கணக்கு, சம்பள உயர்வு, விடுப்பு மந்தனப்பிரிவு தொடர்பான அனைத்து வகையான பணிகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது கைப்பையின் உள்ளே இருந்து தனது சொந்த பணம் என ரூ.330/- எடுத்து ஆஜர் செய்ததை தொடர்ந்து அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.330/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. பின்னர் திருமதி.மஞ்சு என்பவரின் இருக்கைக்கு இடது பக்கத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் சுமதி என்றும் இந்த அலுவலகத்தில் சாலை பணியாளராக கடந்த 23.08.2023ந்தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். இந்த அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் சம்பள கணக்கு, சம்பள உயர்வு, விடுப்பு மந்தனப்பிரிவு தொடர்பான அனைத்து வகையான பணிகள் தொடர்பாக தட்டச்சு செய்யும் பணியை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது கைப்பையின் உள்ளே இருந்து தனது சொந்த பணம் என ரூ.60/- எடுத்து ஆஜர் செய்ததை தொடர்ந்து அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.60/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அவரது இருக்கைக்கு முன்பு இருந்த டேபிளின் டிராயர் மற்றும் அவரது இருக்கைக்கு வலது பக்கத்தில் அலுவலக கோப்புகள் காணப்பட்ட பச்சைநிற இரும்பு பீரோவும் சோதனை செய்யப்பட்டது.

7) பின்னர் திருமதி.சுமதி என்பவரின் இருக்கைக்கு பின்புறத்தில் மேற்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ஷாஜி என்றும் இந்த அலுவலகத்தில் கடந்த 03.03.2014ந்தேதி உதவியாளராக பணியில் சேர்ந்ததாகவும், பின்னர் தற்போது 09.05.2025ந்தேதி முதல் உரிமம் ஆய்வாளராக (License Inspector) பணிபுரிந்து வருவதாகவும் டிவிஷன்-90 மற்றும் டிவிஷன்-93 ஆகியவற்றில் உள்ள அதைத்து வகையான நிறுவனங்கள், கடைகள்

வணிக வளாகங்கள் ஆகியவற்றிற்கான தொழில் வரி, நிறுமம் வரி, தொழில் உரிமம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை காசோலையாக வசூல் செய்யும் பணியையும் மற்றும் இதர பணிகளையும் செய்வதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, பணம் குறித்து பதில் கூறுவதில் தடுமாற்றம் அடைந்தார். அவர் இருக்கைக்கு முன்பு இருந்த டேபிளின் டிராயரை சோதனை செய்த போது பணம் என ரூ.1,620/- (Rs.500X2=Rs.1000/-;Rs.200X1=Rs.200/-; Rs.100X3=Rs.300/-; Rs.50X2=Rs.100/-; Rs.20X1=Rs.20/-) காணப்பட்டது. அந்த பணம் தொடர்பாக அவரிடம் விளக்கம் கேட்ட போது பதில் கூற முடியாமல் தடுமாற்றம் அடைந்தார். ஆதலால் லஞ்சப் பணமாக இருக்கலாம் என்ற அடிப்படையில் மேற்சொன்ன பணம் ரூ.1,620/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது

8) பின்னர் திருமதி.சுமதி என்பவரின் இருக்கைக்கு வலதுபுறத்தில் தெற்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் லட்சுமி என்றும் தற்காலிக பணியாளராக (Nation Urban Livelihood Mission என்ற scheme மூலம்) இந்த அலுவலகத்தில் கடந்த 2015 முதல் பணிபுரிந்து வருவதாகவும் அனைத்து வகையான நிறுவனங்கள், கடைகள் வணிக வளாகங்கள் ஆகியவற்றிற்கான தொழில் வரி, நிறுமம் வரி, தொழில் உரிமம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை காசோலையாக வசூல் செய்வது தொடர்பாக அட்டவணை தயார் செய்யும் பணியையும் மற்றும் இதர பணிகளையும் செய்வதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது அவர் தனது கைப்பையின் உள்ளே இருந்து தனது சொந்த பணம் என ரூ.860/- எடுத்து ஆஜர் செய்ததை தொடர்ந்து அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.860/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அவரது இருக்கைக்கு முன்பு இருந்த டேபிளின் டிராயர் மற்றும் அவரது இருக்கைக்கு பின்புறத்தில் அலுவலக கோப்புகள் காணப்பட்ட பச்சைநிற இரும்பு பீரோவும் சோதனை செய்யப்பட்டது. மேலும் தொடர்ந்து மேற்சொன்ன வருவாய்

பிரிவு அலுவலகத்தின் தெற்கு பக்கத்தில் கழிவறைக்கு அருகே வடக்கு நோக்கி காணப்பட்ட பச்சைநிற இரும்பு பீரோவை சோதனை செய்யப்பட்டது. அந்த இரும்பு பீரோவின் அடியில் ஒரு வெள்ளை நிற கவரின் மடித்த நிலையில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தமாக காணப்பட்டது. அந்த வெள்ளை நிற கவரில் முதல் பகுதியாக மடித்த நிலையில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் எட்டு எண்ணிக்கை காணப்பட்டது. இரண்டாவது பகுதியாக மடித்த நிலையில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் பதினான்கு எண்ணிக்கை காணப்பட்டது. மூன்றாவது பகுதியாக மடித்த நிலையில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் பத்து எண்ணிக்கை காணப்பட்டது. நான்காவது பகுதியாக மடித்த நிலையில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் பத்து எண்ணிக்கை காணப்பட்டது மற்றும் ஐந்தாவது பகுதியாக மடித்த நிலையில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் பத்து எண்ணிக்கை காணப்பட்டது. ஆக மொத்தம் பணம் ரூ.26,000/- (Rs.500 X 52 Nos.) இருந்தது. சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 7ல் உள்ள வருவாய்த்துறை பிரிவு அலுவலகத்தின் உள்ளே இருந்து எடுக்கப்பட்ட ரூ.26,000/- குறித்து அந்த அலுவலகத்தின் தலைமை அதிகாரியான முதுநிலை வருவாய் அலுவலர் திரு.கிருபாகரன் என்பவரிடம் கேட்டபோது அவர் எந்த வித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். ஆதலால் இந்த அலுவலகத்தில் வருவாய் பிரிவில் பணிபுரியம் அலுவலர்கள் லஞ்சமாக வாங்கிய பணமாக இருக்கலாம் என்ற அடிப்படையில் மேற்சொன்ன கணக்கில் வராத பணம் ரூ.26,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

9) பின்னர் மேற்சொன்ன அலுவலகத்தின் கிழக்கு பக்கத்தில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் கமலா என்றும் தற்காலிக பணியாளராக (Nation Urban Livelihood Mission என்ற scheme மூலம்) இந்த அலுவலகத்தில் கடந்த 2014 முதல் பணிபுரிந்து வருவதாகவும் இந்த

அலுவலகத்தில் அனைத்து வகையான தட்டச்சு பணிகளை செய்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது அவர் தனது கைப்பையின் உள்ளே இருந்து தனது சொந்த பணம் என ரூ.80/- எடுத்து ஆஜர் செய்ததை தொடர்ந்து அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.80/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து வருவாய் பிரிவு அலுவலகத்தின் நுழைவு வாயிலின் இடது புறத்தில் கிழக்கு பக்கமாக அமைந்துள்ள சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவின் முதுநிலை வருவாய் அலுவலர் திரு.கிருபாகரன் அவர்களின் கேபின் அறை அவரது முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. மேலும் திரு.கிருபாகரன் அவர்கள் அனைத்து வகையான நிறுவனங்கள், கடைகள் வணிக வளாகங்கள் ஆகியவற்றிற்கான தொழில் வரி, நிறுமம் வரி, தொழில் உரிமம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை காசோலையாக வசூல் செய்யும் பணியை தரைத்தளத்தில் திரு.D.செல்வகுமார் என்பவர் பணிசெய்து வருவதாக தெரிவித்தார். வருவாய் பிரிவின் முதுநிலை வருவாய் அலுவலர் திரு.கிருபாகரன் அவர்கள் கூறியதன் அடிப்படையில் மற்றும் தரைத்தளத்தில் உள்ள திரு.D.செல்வகுமார் என்பவரின் அலுவலக தனி கேபின் அறையை திரு.கிருபாகரன் அவர்கள் அடையாளம் காண்பித்தார். தரைத்தளத்தின் அலுவலக கட்டிடத்தின் உள்ளே நுழைந்ததும், வலது புறமாக மேற்கு பக்கத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஆதார் சேர்க்கை மையம் என்ற பெயர் பலகையுடன் காணப்பட்ட அறையின் உள்ளே நுழைந்ததும், வலது பக்கத்தில் இரண்டாவதாக, மேற்சொன்ன திரு.D.செல்வகுமார் அவர்களின் தனி கேபின் அறை காணப்பட்டது. முதுநிலை வருவாய் அலுவலர் திரு.கிருபாகரன் அவர்களின் முன்னிலையில் மேற்சொன்ன திரு.D.செல்வகுமார் அவர்களின் அலுவலக தனி கேபின் அறை சோதனை செய்யப்பட்டது. சோதனையில் அவரது வலது பக்க டேபிள் டிராயரில் குங்கும

நிறத்தில் ஆன ஸ்ரீதனலஷ்மி ஜுவல்லரி அவுஸ் என பெயர் பொறிக்கப்பட்ட மூடியுடன் கூடிய சிறிய டப்பா காணப்பட்டது. அதை திறந்து பார்த்தபோது இரண்டு எண்ணிக்கை கொண்ட தங்க நாணயங்கள் காணப்பட்டது. அவற்றில் ஒரு தங்க நாணயத்தின் ஒரு பக்கத்தில் 8 GRAMS 916 GOLD என்று பொறிக்கப்பட்டும் மற்றொரு பக்கத்தில் லட்சுமி உருவம் பொறிக்கப்பட்டதாகவும் காணப்பட்டது. மற்றொரு தங்க நாணயத்தின் ஒரு பக்கத்தில் 916 GRT JEWELLERS 2g என்று பொறிக்கப்பட்டும் மற்றொரு பக்கத்தில் லட்சுமி உருவம் பொறிக்கப்பட்டதாகவும் உள்ளது. மேற்சொன்ன இரண்டு தங்க நாணயங்கள் பற்றி பணியில் இருந்த திரு.D.செல்வகுமார் அவர்களை கேட்டபோது எந்த வித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்சொன்ன இரண்டு தங்க நாணயங்கள் லஞ்சமாக வாங்கியதாக இருக்கலாம் என்ற அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்கொண்டு திரு.D.செல்வகுமார் அவர்களை விசாரித்தபோது அவர், கடந்த 27.01.2015ந்தேதி தற்காலிக பணியாளராக (Nation Urban Livelihood Mission என்ற scheme மூலம்) இந்த அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் அனைத்து வகையான நிறுவனங்கள், கடைகள் வணிக வளாகங்கள் ஆகியவற்றிற்கான தொழில் வரி, நிறுமம் வரி, தொழில் உரிமம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை காசோலையாக வசூல் செய்யும் பணியை செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

10) இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை சோதனையின் முடிவில் மேற்கூறியவாறு மொத்த பணம் ரூ.27,620/- மற்றும் இரண்டு 916 தங்க நாணயங்கள் (2 கிராம் தங்க நாணயம் மற்றும் 8 கிராம் தங்க நாணயம்) மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவில் பணியாற்றும் அலுவலர்களின் இன்றைய

தேதியில் வருகை பதிவேட்டின் நகல் எடுத்தும் அவற்றில் முதுநிலை வருவாய் அலுவலரிடம் கையொப்பம் பெறப்பட்டது. இந்த இருதுறை கூட்டு தணிக்கையின்போது இந்த அலுவலகத்தில் உள்ள எந்த ஒரு ஆவணங்களுக்கும் எந்த வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-7 அலுவலகத்தின் வருவாய் பிரிவின் அலுவலகத்தின் அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ இடையூறு ஏற்படுத்தப்படவில்லை. இந்த திடீர் சோதனை 15.10.2025-ந்தேதி மதியம் 03.30 மணிக்கு தொடங்கி இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம்/- XX 15/10/25
M.YOHAN
O A

ஒப்பம்/-XX 15/10/25
G.LAKSHMI
Road Worker

ஒப்பம்/ XX 15-10-25
D.Varalakshmi
Record Clerk

ஒப்பம்/ XX 15/10/25
D.BHARATHKUMAR
ROAD WORKER

ஒப்பம்/ XX 15/10/25
M.MANJU
ROAD WORKER

ஒப்பம்/ XX
S.D.Sumathi
Road Worker

ஒப்பம்/-XX 15/10/25
B.Lakshmi
(NULM)

ஒப்பம்/-XX 15/10/25
M.SHAJI
LICENCE INSPECTOR

ஒப்பம்/-XX 15/10/25
(A.Kamala)
Typist

ஒப்பம்/ XX 15/10/25
D.SELVAKUMAR
(NULM)

ஒப்பம்/ XX 15/10/2025
(S.KIRUBAKARAN)
SRO

ஒப்பம்/ XX 15/10/25
(V.THAMIZHMANI)
DSP, CC III
V & AC

ஒப்பம்/ XX 15/X/2025
(S.VALLINAYAGAM)
INSPR/CC-III
DVAC, Chennai-16.

ஒப்பம்/ XX 15/10/25
வே.திருவேங்கடம்
து.ஆ.கு.அ
சென்னை-1

I am registering a case in V&AC Chennai City-III Crime No.02/AC/2025/CC-III U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 and Section 106 of BNSS (Section 102 Cr.P.C.) against the Accused A-1 to A-3 on 16.10.2025 at 17.00 hrs. The original complaint and FIR is forwarded to the Hon'ble Principal District Judge, Thiruvallur for the cases under Prevention of Corruption Act and copies of FIR to the officers concerned.

S.Vallinayagam 16.10.2025

(S. VALLINAYAGAM)

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016